[1984 மார்ச் 20

மணப்பாறை தாலுகாவில் கிராமியக் கூட்டுறவு வீடு கட்டும் கடன் சங்கம் மூலம் கடன் பெற்றோர் எண்ணிக்கை

365—(*வினா எண். 17820)—திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுக்காவில் கிராமியக் கூட்டுறவு வீடு கட்டும் கடன் சங்கத்தில் 1983 ஜனவரி முடிய எத்தனை பேர்களுக்குக் கடன் வழங்கப்பட்டு உள்ளது ?

(ஆ) கடன் வழங்குமாறு கோரி வந்துள்ள மொத்த மனுக்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, (அ) திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுக்காவில் கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் கடன் சங்கத்தில் 1983 ஜனவரி முடிய 1,657 பேர்களுக்கு கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

(ஆ) கடன் வழங்குமாறு கோரி 6,269 பேர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள்.

(முற்பகல் 9-50).

திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை தாலுக்காவில் கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் கடன் சங்கத்தில் மருங்காபுரி, வேம்பனூர், மருதுப்பட்டிப் பகுதிகளைச் சேர்ந்த அரிசன மக்கள் 37 பேர்கள் கடன் கோரி மனு செய்தார்கள். 1980 ஆம் ஆண்டிலிருந்து கடன் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே அவர்களுக்கு விரைவில் கடனுதவி கிடைக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிற விவரங்களைப் பரிசீலித்து அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்றால் வழங்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபடத் தயாராக இருக்கிறோம். இந்த ஆண்டில் அதிகமான அளவிற்குத் தருகிற வகையில் மனுக்களைப் பரிசீலித்து செய்வதற்கு அந்த நடவடிக்கையில் இப்போது ஈடுபட்டிருக்கிறோம்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 20]

திரு. மே. அ. இராசகுமார் : தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்குக் கொடுக்கப்படும் கடன் தொகை மிகவும் குறைந்த தொகையாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே வீட்டை நல்ல முறையில் கட்டிக்கொள்கிற வகையில் கடன் தொகையை அரசு மேலும் அதிகரித்துத் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தொகை குறைவாக இருக்கிறதென்று சென்ற ஆண்டிலே சொல்லப்பட்டதன் விளைவாக 4,000 ரூபாய் என்று இருந்தது 6,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த 6,000 ரூபாயில் 1,500 ரூபாய் வீடுகளை கேட்கிறவர்களுடைய உழைப்பைச் சேர்த்து அது 6,000 ரூபாய் என்ற அளவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தொகை இன்னும் அதிகரிக்கப்படுமானால் தருகிற நபர்களின் எண்ணிக்கை குறைந்து விடுகிறது என்பதாலே, குறைந்த தொகைக்கே அதிகமாக வரவேற்பு இருக்கிறது என்பதாலே, அவர்களுடைய வரவேற்பை ஈடு செய்ய முடியாத நிலை இப்போது இருக்கிறது என்பதாலே, தொகையை உயர்த்தாமல் அதே நிலையில் வைத்து பல பேர்களுக்கு தருகிற அளவிற்கு வாய்ப்பை நாம் உருவாக்கிக் கொள்ளலாம்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மணப்பாறை தாலுக்காவில் கூட்டுறவு வீடு கட்டும் கடன் சங்கத்தில் கடன் கோரியவர்களின் எண்ணிக்கை 6,269 என்றும், அதிலே கடன் 1,657 பேர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தத் தாலுக்கா மிகவும் வறண்ட பின் தங்கிய பகுதியாக இருக்கிறது. மனு செய்திருப்பவர்கள் அனைவரும் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்த நிலையில் கடன் கோரி மனு செய்திருப்பவர்களில் 25 சதவீதத்தினருக்குக் கூட கடன் வழங்கப்படாமல் இருக்கிறது. அந்தப் பகுதியை முன்னேற்றுகிற வகையில் இந்த ஆண்டு 1984-க்குள் கடன் கோரியிருப்பவர்களில் 50 சதவீதத்தினருக்காவது கடனை வழங்குவதற்கு அரசு விசேஷ நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மணப்பாறை தாலுகாவில் இவ்வளவு அக்கறை காட்டியிருப்பதற்கு அவருடைய ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். அந்தப் பகுதியில் அதிகமான அளவிற்கு ஆதி திராவிட மக்கள் கடன் கோரியிருப்பதால்தான் இந்த அளவிற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அது பின் தங்கிய பகுதி என்று காரணங்களைச் சொல்லி விரைவில் அவர்களுடைய மனுக்களை கவனிக்க வேண்டுமென்று கேட்கிற காரணத்தால், நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் சொல்லி உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அவர்களுக்குப் புரிய வைத்து நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்கிறேன்.

தமிழகத்தில் நெசவாளர் பயன்படுத்தும் தறிகளை நேப்பாள மாடல் தறிகளாக்கும் திட்டம்

366—(*வினா எண். 20664)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :—

(அ) தமிழகத்தில் நெசவாளர் பயன்படுத்தும் தறிகளை நேப்பாள மாடல் தறிகளாக்கி, வேலை வாய்ப்பை அதிகரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1983 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தேன்

367—(*வினா எண். 20998)—திரு. டி. மணி : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :—

(அ) நடப்பு ஆண்டில் (1983) தமிழ்நாட்டில் எவ்வளவு தேன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது—மாவட்ட வாரியாக ?

(ஆ) எந்தெந்த மாவட்டங்களில் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS